

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## ஜனவரி - 2020

*We Are Here..!! To Guide You..!!*



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜனவரி - 28.01.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்








# இந்திய நிகழ்வுகள்

- **உத்திரபிரதேச மாநிலம் புலந்த்செகரில், ஆர்.எஸ்.எஸ்., நடத்தும் முதல் ராணுவ பள்ளி தொடங்கப்பட உள்ளது.**
  - ஆர்.எஸ்.எஸ்., தலைவராக இருந்த ராஜு பையாவின் பெயரில், "ராஜு பையா சைனிக் வித்யா மந்திர்" என அழைக்கப்படும் பள்ளியின் கட்டடம் தயாராக உள்ள நிலையில் வகுப்புகள் ஏப்ரல் மாதம் முதல் துவங்கும்.

- **உத்திரபிரதேசத்தில் பணிபுரியும் தமிழகத்தைச் சேர்ந்த ஐபிஎஸ் அதிகாரி பி.தினேஷ்குமாருக்கு குடியரசு தின பாராட்டு விருது** வழங்கப்பட்டுள்ளது.
  - இந்து-முஸ்லிம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளுடன் தினேஷ்குமார் பேச்சுவார்த்தை நடத்தி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இதனால், பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் நேராமல் அமைதியான முறையில் போராட்டம் தொடர்கிறது. இந்த செயலை பாரட்டி தினேஷ்குமாருக்கு உ.பி. அரசு தங்கப் பதக்கம் வழங்கி கவுரவித்துள்ளது.
  - **செய்தி துளிகள்:**
    - 2009-ம் ஆண்டு குடிமைப் பணி தேர்வில் வென்று உ.பியின் ஐபிஎஸ் அதிகாரியான தினேஷ்குமார், கோவையின் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இளநிலை

பட்டம் பெற்றவர்.

- **கர்நாடகாவில் உள்ள எழுத படிக்க தெரியாத பழ வியாபாரி ஹரேகலா கஜப்பாக்கு பத்மஸ்ரீ விருது** அறிவிக்கப்பட்டுள்ளது.
  - தனது கிராமத்தில் உள்ள குழந்தைகள் கல்வி பயில வேண்டும் என்பதற்காக தனது சொற்ப வருமானத்திலும் கொஞ்சம் பணம் சேர்த்து பிற இடங்களில் கடன் வாங்கி தனது கிராமத்திலேயே முதன்முறையாக பள்ளி ஒன்றை தொடங்கியுள்ளார். ஏழ்மையான நிலையிலும் மாணவர்கள் படிக்க கஜப்பா செய்த இந்த முயற்சியை பாராட்டி மத்திய அரசு அவருக்கு பத்மஸ்ரீ விருது அறிவித்துள்ளது.
  - **செய்தி துளிகள்:**
    - பத்மஸ்ரீ என்பது இந்திய அரசால் வழங்கப்படும் நாட்டின் நான்காவது உயரிய குடியியல் விருது.
    - இது முதன் முதலில் ஜனவரி 2, 1954ஆம் ஆண்டில் இந்தியக் குடியரசுத் தலைவரால் ஏற்படுத்தப்பட்டது.
    - பாரத ரத்னா, பத்ம விபூசன், பத்ம பூசன் விருதுகளுக்கு அடுத்தபடியாக நான்காவது வரிசையில் அமைந்துள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **எளிதில் உடையக் கூடிய மற்றும் அளவில் சிறிய பொருள்களை, கையால் தொடாமல் ஒலி அலைகளைக் கொண்டு தேவையான இடத்துக்கு நகர்த்தும் புதிய ரோபோவை விஞ்ஞானிகள்**

**கண்டுபிடித்துள்ளனர்..**

- ○ சுவிட்சர்லாந்தில் உள்ள ஜூரிச் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இந்த ரோபோவை கண்டுபிடித்துள்ளனர். இந்த ரோபாவில் அரைக்கோள வடிவத்தில் இரண்டு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.
- ○ அவற்றிற்கு நடுவில் மீயொலிகளை அனுப்பி பொருள்களை நகர்த்தும் தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
- ○ **செய்தி துளிகள்:**
  - ▪ இந்த ரோபோவைக் கொண்டு எளிதில் உடையக் கூடிய பொருள்களை தூக்கும்போது அவை சேதமடைவதற்கான வாய்ப்புகள் இல்லை.
  - ▪ மீயொலிகளின் அழுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த ரோபா இயங்கும்.
  - ▪ மீயொலிகள் ஏற்படுத்தும் அழுத்தத்தை மனிதர்களால் பார்க்க, கேட்க இயலாது.

- **அசாமில் தனி மாநிலம் கோரி ஆயுதம் தாங்கி போராடிய போடோ அமைப்பினருடன் முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.**
  - ○ போடோலேண்ட் பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் முன்னிலையில் நடந்த நிகழ்ச்சியில் மத்திய உள்துறை இணைச் செயலாளர் சத்யேந்திர கார்க், அசாம் தலைமை செயலாளர் குமார் சஞ்சய் கிருஷ்ணா மற்றும் தனி மாநில போராட்டத்தில்

We Shine Academy™

ஈடுபட்டிருந்த போடோ இன அமைப்புகள் நான்கின் பிரதிநிதிகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

- **செய்தி துளிகள்:**
  - அசாமிய மொழி : போடோ
  - அசாமிய ஆளுநர் : ஜகதீஷ் முகீ
  - அசாமிய முதலமைச்சர்: சர்பானந்த சோனாவால்

## திருக்குறள்

**குறள்: 91**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம் : இனியவை கூறல்

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**

**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்**

**விளக்கம்:** இன்சொற்களாவன, வஞ்சனையில்லா, அன்போடு கலந்த மெய்ப்பொருள் உணர்ந்தவரின் சொற்களே ஆகும்.

WeShine Academy™